ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1654/11 - 2010 මැයි 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.05.20

1654/11 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தென் மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தைக் கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவினதும் 4 ஆம் பிரிவினதும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்றதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆவது பிரிவினதும் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்*

தென் மாகாண மாகாண சபையின் நிதி, திட்டங்கள் ஆக்கல், சட்டமும் ஒழுங்கும், போக்குவரத்து, நீர் வினியோகமும் வடிகாலமைப்பும், மின்சக்தி, பொறியியல் சேவைகள், சுகாதாரம், சுதேச வைத்திய மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சராகிய குஸ்திஞ்ஞாவடு ஷான் விஜயலால் த சில்வா ஆகிய என்னால், தென் மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தைக் கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவாலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (2) ஆம் பிரிவாலும் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவராகிய திரு. ஹேவா லொக்குகே ஜயசிரி அவர்கள் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவராகக் கருமமாற்றும் போது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாண மாகாண சபை உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவினதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் பிரிவின் கீழ் கணக்கெடுக்கப்படும் தவறொன்றைச் செய்துள்ளாரா எனப் பரிசீலனை செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தரின் பரிசீலனை அறிக்கையால் வெளியாகிய விடயங்களின்படி, குறிப்பிட்ட திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவரால் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவினதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் பிரிவின் கீழ் கணக்கெடுக்கப்படும் தவறுகள் செய்யப்பட்டுள்ளதாகத் திருப்பதியடைந்து குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தென் மாகாண மாகாண சபையின் உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தை கண்காணிக்கும் அதிகாரங்கள் பற்றிய நியதிச் சட்டத்தின் 2 (1) பிரிவினதும் 4 (2) பிரிவினதும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 185 (1) ஆம் பிரிவினதும் 185 (3) (ஆ) ஆம் பிரிவினதும் பிரகாரம் திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவராகிய திரு. ஹேவா லொக்குகே ஜயசிரி அவர்களை திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் தலைவர் பதவியில் இருந்தும் உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கம் செய்கின்றேன்.

ஜீ. டபிள்யு. ஷான் விஜயலால் த சில்வா,
நிதி, திட்டங்கள் ஆக்கல், சட்டமும் ஒழுங்கும்,
போக்குவரத்து, நீர் வினியோகமும் வடிகாலமைப்பும், மின்சக்தி,
பொறியியல் சேவைகள், சுகாதாரம், சுதேச வைத்தியம் மற்றும்
உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்,
தென் மாகாண மாகாண சபை.

*2010, மே 19.*

*5-38*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.